**பக்கம் 1:**
மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான
அகில உலக ஜெப நாள் 2023

# நான்
# அவர்கள் விண்ணப்பத்தை
# கேட்டேன்

இளைஞர்களுக்கான ஆதாரம்

எழுதியவர் மேஜர் அனுகிரகா
*இந்திய வடக்கு மாகாணம்*

'இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சை கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் ' (யாத்திராகமம் 2:23-24).

## வரிசை 1:

### அடிமைத்தனம் என்றால் என்ன?

அடிமைத்தனம் என்பது புதிய திட்ம் அல்ல மெசப்டோமியா, ரோம் மற்றும் கிரீஸ் போன்ற சமூகங்களில் ஒரு பகுதியாக ஆயிரகணக்கான ஆண்டுகளாக காணப்படுகிற ஒரு காரியம் ஆகும். அடிமைத்தனம் என்பது ஒருவர் மற்றொருவரை தன் பொருளாகவோ உடமையாகவோ நினைத்து கட்டுப்படுத்துவது ஆகும். அது மிரட்டிழயோ உடல்ரீதியான வன்முறை மூலமோ, உணர்ச்சி, உளவியல் மற்றும் ஆன்மீக ரீதியிலோ இருக்கலாம்.

நிதி. மக்கள் அடிமைத்தனத்தை அனுபவிக்கும்போது சுரண்டபடுகிறார்கள். அது அவர்கள் மற்றொருவரின் சுயநலம் மற்றும் இலாபத்திற்காக நியாயமற்ற முறையில் நடத்தபடுவதை குறிக்கிறது.

அடிமைபடுத்தபட்ட மக்கள் மனிதாபிமற்ற முறையில் மற்ற பொருட்களை போல நடத்தப்படுகிறார்கள். அவர்களுடைய அடையாளமும் தெரிவு செய்யும் திறனும் பறிக்கப்பட்டிருக்கும்.

## வரிசை 2:

அவர்கள் வாழ்க்கை கட்டுப்படுத்தபட்டதாக காணப்படும். அவர்களுடைய நம்பிக்கை, கனவு, அன்பிற்குரியவர்கள், அவர்களுடைய கடந்த காலம் மற்றும் எதிர்காலத்தை தியாகம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்களுடைய வேலைக்கான சம்பளம் அவர்கள் வாழ்வதற்கு போதுமானதாக இல்லை. இது அவர்களுடைய சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை பறிக்கிறது.

கொத்தடிமைகளாக வாழ்வது நினைத்து பார்க்க முடியாத கடினமான காரியம் ஆகும். அவர் தனது சாயலாக ஒவ்வொருவரையும் படைத்திருக்கிறார். கடவுள் நமக்கு தந்த மதிப்பு மற்றும் மரியாதையையோடு அடிமைகள் நடத்தபடுவது இல்லை. அடிமைத்தனம் மக்களிடமிருந்து சுதந்திரம், சந்தோஷம், வாய்ப்ப, நம்பிக்கை அனைத்தையும் எடுத்துபோடுகிறது. எல்லா மக்களும் வாழ்ந்து பகிர்ந்து கொள்ளகூடிய வெளிச்சத்தை அவர்களிடமிருந்து எடுத்து விடுகிறது. இருள் அவர்களை சூழ்ந்து கொள்ளுகிறது.

அடிக்குறிப்பு

1. இளைஞர்களுக்கான ஆதாரம்.

**பக்கம் 2**
**வரிசை 1:**

2022 உலகளாவிய மதிப்பீடுகள் நவீன அடிமைத்தனம் மனித கடத்ததலினால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை எப்போதும் இல்லாத அளவாக 49.6 மில்லியன் உயர்ந்துள்ளதை குறிக்கிறது.

- 27.6 மில்லியன் மக்கள் கடின உழைப்பையும் பாலியல் சுரண்டலையும் அனுபவித்து வருகின்றனர்.
- 22 மில்லியன் மக்கள் கட்டாய திருமணத்திற்குள்ளாக்கப்படுகின்றனர்.

அடிமைத்தனம் உலகம் எப்படி காணப்படுகிறது?

அடிமைத்தனம் உலகம் பல வழிகளில் காணப்படுகிறது. இங்கே சில உதாரணங்களை காணலாம்:

ஏஞ்சலா ஆதரவற்றவள், அவளுடைய மாமா மற்றும் அத்தையுடன் வாழ்ந்து வந்தாள். அவள் அவர்களுடன் வந்தவுடன் தினந்தோறும் அவள் வீட்டை சுத்தப்பட வேண்டும், உணவு தயாரிக்க வேண்டும், துணிகளை துவைக்க வேண்டும் மற்றும் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் அவள் செய்ததினால் பல நாள்கள் அவளால் பள்ளிக்கூடம் செல்ல முடியவில்லை.

கிளினமின் தந்தை அவர்கள் கிராமத்தில் வேலையை இழந்தார். அவர்கள் குடும்பம் பெரியது மற்றும் அதிக குழந்தைகளுக்கு உணவளிக்கவேண்டி இருந்தது. பக்கத்து வீட்டுகாரர் கிளினத்தை ஒருவருக்கு அதிக சம்பளம் தரும் வேலையையும் பள்ளிபடிப்பை முடிக்கும் வாய்ப்பையும் அளித்து அவருக்கு அறிமுகப்படுத்தியபோது, அது தன் குடும்பத்திற்கு உதவும் என நினைத்தார்.

ஒருமுறை அவர் அங்கே சென்றபின் பள்ளிகூடத்திற்கு திரும்ப செல்லவில்லை. அதற்கு மாறாக தினமும் 12 -14 மணிநேரங்கள் இறால் படகில் அடியாளத்திற்கு சென்று வலைகளை அவிழ்த்துவிடும் பணியை சம்பளமில்லாமல் சிறிது உணவிற்காக செய்தார்.

போராளிகள் படையெடுத்து நகரத்தை தாக்கியபோது பேட்மேயின் குடும்பம் அந்த நகரத்தை விட்டு வெளியேறியது. அகதிகள் முகாமில் தங்கியிருக்கும்போது குடும்பத்தின் எதிர்ப்பை மீறி பேட்மேயிக்கு திருமணம் செய்து வைத்தார். தற்போது அவளுடைய வயதான கணவரும் மாமியாரும் அவள் வாழ்க்கையை கட்டுப்படுத்தினர் மற்றும் சம்பளமில்லாத வேலைக்காரியாய் நடத்தினர்.

ஷாலியின் புதிய காதலன் அழகாகவும் வசீகரமாகவும் இருக்கிறான். ஏப்போதும் அவன் அவளுக்கு பரிசுகளை கொடுத்து கொண்டிருந்தான். அவன் அவளை மிகவும் நேசித்ததாக உணர வைத்தான். அவள் எப்போதும் தன்னையும் தனக்கு சொந்தமான பொருட்களையும் கவனித்துக்கொள்ள ஒருவரை தேடிக்கொண்டிருந்தாள். சில வாரங்களுக்கு பிறகு அவளுடைய காதலன் தான்கொடுத்த அனைத்தையும் திரும்ப தரும்படியும் தன் நண்பர்களுக்கு உடலுறவை கொடுத்து தனக்கு உதவும்படியும் கேட்டுக்கொண்டான். அவள் அதிலிருந்து வெளியேற நினைத்தபோது அவன் கோபபட்டு அவளையும் அவள் குடும்பத்தையும் தாக்கப் போவதாக மிரட்டினான்.

ரவிக்கு 12 வயதாயிருக்கும் போது கையால் செய்யப்பட்ட தரைவிரிப்புகளை உருவாக்கும் பணியில் நல்ல கம்பளம் பெறலாம் என வாக்குறுதி கொடுத்தவருடன் செல்ல அவர் பெற்றோர்கள் அனுமதியளித்தனர். வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டார். பகலிலே என் வேலை முடியாவிட்டால் மெழுகுவர்த்தி வெளிச்சத்திலும் வேலை செய்ய வேண்டியிருந்தது. பல மணிநேரங்கள் வேலை செய்ய கட்டாயப்படுத்தபட்டார். வாக்குறுதியளித்தபடி பணம் கொடுக்கப்படவில்லை. உணவும் சரியாக கொடுக்கப்படவில்லை மற்றும் அவர் வாழ்க்கைநிலை மிகவும் கொடுமையாக இருந்தது.

பாதுகாப்பிற்காக பெயர் மாற்றப்பட்டுள்ளது

வேதாகமம் கற்பிக்கிறது

யாத்திராகமத்தின் ஆரம்பம் அந்த நேரத்தில் இஸ்ரவேலர் அனுபவித்து கொண்டிருந்த போராட்டம், நெருக்கம் மற்றும் அடிமைதனத்தின் சூழ்நிலையை அறிந்துகொள்ள உதவுகிறது. இந்த அந்நிய தேசத்தில் இஸ்ரவேலர்களின் வரலாறை திரும்பி பார்க்கும்போது, அது தன் சகோதரர்களால் அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பின் மனித கடத்தல் காரணமாக அமைகிறது. பார்வோனுக்கு அடிமையாக இருந்ததின் நிமித்தமாக யோசேப்பு கடினமான சூழ்நிலைகள், வலிகள் மற்றும் நெருக்கத்தை அனுபவித்த போதிலும் கடவுள் யோசேப்பின் வாழ்க்கையில் ஒரு திட்டத்தை வைத்திருந்தார். கடவுள் யோசேப்பை விடுவித்து எகிப்தின் உயர்ந்த தலைவராக மாற்றினார். பஞ்சகாலத்தில் யோசேப்பு தன் சகோதரர்களை மன்னித்து எகிப்தில் குடியிருக்க உதவினார்.

அடிக்குறிப்பு

2. இளைஞர்களுக்கான ஆதாரம்.

பக்கம் 3

வரிசை 1:

இஸ்ரவேலர்கள் எண்ணிக்கையிலும் பலத்திலும் பெருகிய போது பார்வோன் அவர்களை கண்டு பயந்தான். அவன் தன் மக்களை பார்த்து ‘இதோ அஸ்ரவேல் புத்திரரான ஜனங்கள் நம்மிலும் ஏராளமானவர்களும் பலத்தவர்களுமாயிருக்கிறார்கள். அவர்கள் பெருகாதபடிக்கும், யுத்தம் உண்டானால் அவர்கள் நம்முடைய பகைஞரோடு கூடி நமக்கு விரோதமாக யுத்தம் பண்ணி தேசத்தை விட்டு புறப்பட்டு போகாதபடிக்கு நாம் அவர்களை குறித்து ஒரு உபாயம் பண்ண வேண்டும் என்றான் (யாத்திராகமம் 1:10) அதனால் பார்வோன் இஸ்ரவேலர்களை அடிமைபடுத்தினான். அவர்கள் மீது பணி தலைவர்களை அமர்த்தி அவர்கள் உழைப்பை சுரண்டினான். எகிப்தியர்கள் அவர்கள் மீது இரக்கமில்லாமல் பணி சுமத்தினர். பித்தோம் ராமசேஸ் பட்டணங்களை கட்டினதின் மூலம் அவர்கள் வாழ்க்கை கசப்பாக மாறினது (யாத்திராகமம் 1:11 -14) ‘இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக்கொண்டிருந்தர்ாகள் (யாத்திராகமம் 2:23)

அதிஷ்டவசமாக கடவுள் இஸ்ரவேல் ஜனங்கள் மீது அக்கறை கொண்டிருந்தார். அவர்களை ஆழமாக நேசித்தார் மற்றும் அவர்கள் கவலையின் சத்தத்தை கேட்டார். நாம் யாத்திராகமம் 2:23-25 வாசிக்கும்போது, அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சை கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் ’

கலந்துரையாடல் கேள்விகள்

இந்த வசனங்கள் கடவுளைபற்றி என்ன கூறுகின்றன? அவர் என்ன செய்கிறார் என்று சொல்லுகிறது?

ஆயிரகணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரவேலர் அடிமைகளாக மோசமாக நடத்தப்பட்டபோது கடவுள் அவர்களிடம் ஆழ்ந்த அக்கறை காட்டினார்.அவர் அவர்களின் விண்ணப்பத்தையும் பெருமூச்சுகளையும் கேட்டதுமட்டுமல்ல கவனித்தார். என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்ாதை கவனித்தார். கடவுள் கேட்கிறார், பார்க்கிறார் மற்றும் அவர் புரிந்து கொள்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. தேவன் அவர்கள் பெருமூச்சை கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் .தேவன் இஸ்ரவேல் புத்திரரை கண்ணோக்கினார். தேவன் அவர்களை நினைத்தருளினார். யாத்திராகமம் புத்தகம் கடவுள் செயல்பட்டதை விவரிக்கிறது. கடவுள் தன் ஜனங்களை இருளிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டுவர ஆரம்பித்தார்.

வரிசை 2 :

இன்றும் உலகில் அடிமை நிலையில் இருக்கும் கோடிக்கணக்கான மக்கள், பெரியவர்கள் குழந்தைகள் தங்கள் மீது கடவுள் அக்கறை காட்டுகிறார். ஏஞ்சலா, கிளினாம், பேட்மே, ஷாலு மற்றும் ரவி போன்று தவறாக நடத்தபடுகிற மக்கள் மீது யாராவது அக்கறை கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். யாத்திராகமம் புத்தகத்தில் நாம் வாசிக்கும் வசனங்கள் அவர்கள் தனியாக இல்லை என்பதையும், கடவுள் கேட்கிறார், பார்க்கிறார் மற்றும் அவர் புரிந்து கொள்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது.

அடிமைகளாகவும் அடிமைத்தனத்தில் சிக்கியிருப்பவர்களை பற்றியும் நாம் அக்கறை கொள்ள வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். மோசமான முறையில் நடத்தப்படும் மக்களுக்கு உதவும் வழிகளை பற்றி நாம் அறிந்திருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார்.

கலந்துரையாடல் கேள்விகள்

நாங்கள் என்ன செய்ய முடியும் என்பதை பற்றிய உங்களுடைய யோசனைகள் என்ன?

1. அடையாளங்களை அறிந்து கொள்ளுங்கள் - ஒருவர் சுரண்டப்படுவதை காண்பிக்கும் அறிகுறிகளை அறிந்து கொள்ளுங்கள். நிறைய காரியங்களை கவனிக்க வேண்டும். மக்களின் வாழ்க்கை நிலை, பணி நிலைகள் மற்றும் அவர்களை சுற்றியுள்ளவர்களால் அவர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதை பார்க்க வேண்டும்.
2. இணையதளத்தில் எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் - நீங்களும் உங்கள் நண்பர்களும் ஒருவரையொருவர் எப்படி பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்?
3. மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளுங்கள் - அடையாளங்களை அறிந்து கொள்ளுங்கள் அதை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளுங்கள். இன்று நீங்கள் கற்றுக்கொண்ட அடிமைத்தனத்தின் அறிகுறிகளை உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். அது பாதுகாப்பான சமூகத்தை உருவாக்கும். பாதிக்கபட்டவர்களை கண்டறிந்தால் புகார் செய்யுங்கள். இந்த பிரச்சனை குறித்த விழிப்புணர்வை சிறு குழுக்களுடன் இணைந்து உருவாக்குங்கள். உங்கள் ஞயிறு பள்ளி மற்றும் பள்ளிகூடத்தில் விளக்கமாக சொல்லலாம்.

அடிக்குறிப்பு

3. இளைஞர்களுக்கான ஆதாரம்.

பக்கம் 4:

வரிசை 1:

4.அடிமைத்தனம், மனித கடத்தல் மற்றும் சுரண்டலை அதிகம் அறிந்து கொள்ளுங்கள். உங்கள் குடும்பம், சபை மற்றும் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்கள் ஞயிறு பள்ளி மற்றும் பள்ளிகூடத்தில் விளக்கமாக சொல்லலாம்.

4. ஜெபம் அடிமைத்தனத்தில் இருக்கும் மக்களுக்காகவும் கடவுள் அவர்கள் விண்ணப்பத்தை கேட்டு அவர்களை பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

வரிசை 2:

5. இரக்கம், மரியாதை மற்றும் அன்புடன் மக்களை நடத்துங்கள்.
6. இரக்கம், மரியாதை மற்றும் அன்புடன் மக்களை நடத்த உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களை உற்சாகபடுத்துங்கள்.
7. உங்கள் பள்ளிகூடம், ஆலயம் மற்றும் அரசாங்கத்திலுள்ள தலைவர்களிடம் பாதுகாப்பற்ற மக்களுக்கு உதவி செய்யும்படி கேளுங்கள்.

உலகத்தில் அடிமைபடுத்தப்பட்டு அடிமைகளாக நடத்தப்படும் மக்களுக்காக நாம் இணைந்து ஜெபிப்போம்.

அன்புள்ள இயேசுவே,

உலகத்தில் அடிமைபடுத்தப்பட்டு அடிமைகளாக நடத்தப்படும் மக்களுக்கு உதவி செய்யும். அவர்கள் விடுதலையும் பாதுகாப்பையும் பெற உதவி செய்யும். அவர்கள் குடும்பத்தை பாதுகாத்து பிரிந்த குடும்பங்கள் மீண்டும் ஒன்றுசேர உதவி செய்யும். அவர்கள் வாழ்க்கை கடினமாகவும் சோகமாகவும் இருக்கும்போது நீர் அவர்களை நேசிப்பதையும் பாதுகாப்தையும் அறிந்துக்கொள்ள உதவி செய்யும்.

ஆமென்.

9 வயது அலினாவின் ஜெபம் - நெறிமுறை கதை கட்டமைப்பில் அனுமதி வழங்கப்படுகிறது

செயல்முறை

ஜெப நிலையங்கள்

அடிக்குறிப்பு

4. இளைஞர்களுக்கான ஆதாரம்.